இலங்கை வைப்பகக் காப்புறுதித் திட்டம் - 2024

----

1. நிதிக்கூற்றுககள்

1.1 அபிப்பிராயம்

இலங்கை வைப்பகக் காப்புறுதித் திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமையாண்மையில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் உள்ளிட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது தகவல்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகள் மற்றும் 2023 இன் 17 ஆம் இலக்க வங்கிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 54(2) ஆம் பிரிவிலுலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையிலுள்ள நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, திட்டத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு திட்டத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் திட்டத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முடியுமான அளவிற்கு பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பு மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் நோக்கில் திட்டத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு நிதியத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதா எனவும்,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும்.

1.5 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
இந்தத் திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட மேல்முறையீட்டிற்கு பதிலளிக்கும் விதமாக, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (IRD) 2023 மார்ச் 08 மற்றும் 2023 நவம்பர் 10 தேதியிட்ட அதன் கடிதங்களின் மூலம், 2022 ஆம் ஆண்டு 25 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி (SSCL) சட்டத்தின் பிரிவு 2(இ) இன் படி, நிதிச் சேவைகளுக்குக் காரணமான பெறுமதி கூட்டலின் 100 சதவீதத்தில், பங்களித்தல் முறையைப் பயன்படுத்தி கணக்கிட்டு, 2.5 சதவீத விகிதத்தில் SSCL வரியைச் செலுத்த இந்தத் திட்டம் கடமைப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், இந்தத் திட்டம் SSCL வரியை செலுத்துவதற்கு உடன்படவில்லை என்பதுடன், திட்டத்தின் பொறுப்பு தொடர்பாக IRD உடன் இறுதி	SSCL இன் பொருந்தக்கூடிய தன்மை குறித்து IRD உடனான கடிதப் பரிமாற்றத்தைத் தொடர்ந்து, 2025 ஜனவரி 17 அன்று IRD வெளியிட்ட விளக்கமளித்தலை எதிர்த்து எழுத்துப்பூர்வ மேன்முறையீட்டை தயாரிப்பதற்காக SLDIS ஒரு தனியார் நிறுவனத்தை ஈடுபடுத்தியதுடன் 2025 மே 19 அன்று ஒரு ஆட்சேபனை சமர்ப்பிக்கப்பட்டது. 2025 ஜுன் 23 அன்று நடைபெற்ற ஒரு கூட்டத்தில், SLDIS ஐ ஒரு விலக்களிப்பு பெற்ற நிறுவனமாக அங்கீகரிக்க நிதி அமைச்சிட மிருந்து (MoF) கொள்கை முடிவு எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை IRD வலியுறுத்தியதுடன் ஒரு	SSCL இலிருந்து விலக்களிப்பு வழங்குவதற்காக முன்மொழியப் பட்ட பின்னோக்கிய சட்டத் திருத்தத்தை இறுதி செய்வதை விரைவுபடுத்த நிதி அமைச்சு மற்றும் IRD உடன் தொடர்ச்சியான பின்தொடர்தல் மேற்கொள்ளப்படுவதை இந்தத் திட்டம் உறுதி செய்ய வேண்டும்.

இணக்கப்பாடு எட்டப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. அதன்படி, இந்தச் சட்டம் அமுலாக்கப்பட்டதிலிருந்து இந்தத் திட்டத்தால் SSCL செலுத்தப்படவில்லை.	முடிவு எடுக்கப்படும் வரை எந்த SSCL கொடுப்பனவுகளையும் செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்தி, ஒரு பின்னோக்கிய சட்டத் திருத்தத்தைத் தொடர பரிந்துரைத்தது. அதைத் தொடர்ந்து, 2025 ஆகஸ்ட் 04 அன்று திறைசேரிச் செயலாளருடன் நடைபெற்ற கூட்டத்தில், நிதிச் சேவைகளிற்காக VAT மற்றும் NBT இலிருந்து வழங்கப்பட்ட முந்தைய விலக்கப்புக்களுக்கு இணங்க, சட்டத்தில் ஒரு பின்னோக்கிய திருத்தம் மூலம் SLDIS க்கு SSCL இலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.	

2. நிதிசார் மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான தொழிற்பாடுகள் ரூபா 26.6 பில்லியன் இலாபத்தை விளைவித்திருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 24.1 பில்லியனாகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 2.5 பில்லியன் முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் நிதிக் கருவிகள் மீதான வட்டி வருமானம் அதிகரித்திருந்தமையே இந்த முன்னேற்றத்துக்கான பிரதான காரணியாகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 உறுப்பினர் நிறுவனங்களுக்கான கடன்கள் (எம்ஜ கள்)

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கை வைப்பக காப்புறுதித் திட்ட பிரமாணங்களின் பிரிவு 8.1(ii) இன் படி {2023 நவம்பர் 14 ஆம் தேதி வரை நடைமுறையில் இருக்கும் 2021 இன் 2 ஆம் இலக்க இலங்கை வைப்பக காப்புறுதித் திட்ட பிரமாணங்களின் பிரிவு 8.1(ii)} எந்தவொரு எம்ஜ க்கும் வழங்கப்படுகின்ற பிணைக் கடன்கள் அல்லது முற்பணங்கள் அத்தகைய உறுப்பு நிறுவனத்தில் கடுமையான திரவத்தன்மை நெருக்கடிச் சந்தர்பங்களில் வழங்கப்படும். அதன்படி, 2014 டிசம்பர் 15 அன்று ஒரு எம்ஜ க்கு ரூபா 6 பில்லியன் கடன் வழங்கப்பட்டது. 2024 டிசம்பர் 31 நிலவரப்படி, அந்தக் கடன் தொகையில் ரூபா 261.46 மில்லியன் பிணைப்படுத்திய குத்தகை மற்றும் வாடகை கொள்முதல் தொதகுதிக்கு எதிராக கலைப்பாளரிடமிருந்து அறவிடப்பட்டிருந்ததுடன் கடனின் பெறத்தக்க மீதி ரூபா 1,229 மில்லியனாக இருந்தது. நிதி வணிகத்தை மேற்கொள்வதற்காக மேற்படி எம்ஜ	2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க வங்கி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (BSPA) 2023.11.15 முதல் நடைமுறைக்கு வந்ததுடன் 2021 இன் 02 ஆம் இலக்க இலங்கை வைப்புத்தொகை காப்பீடு மற்றும் பணப்புழக்க ஆதரவுத் திட்ட (SLDILSS) விதிமுறைகள் இரத்து செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கட்டளையானது BSPA இன் கீழ் வெளியிடப்பட்டது. கடுமையான பணப்புழக்க நெருக்கடி ஏற்பட்ட	இலங்கை வைப்பகக் காப்புறுதித் திட்டத்தின் கலைப்பு செயல்முறையை உன்னிப்பாகக் கண்காணித்து, நிலுவையில் உள்ள கடன் தொகையை கிடைக்கக்கூடியதாக உள்ள பிணைகளிலிருந்து அதிகபட்சமாக மீட்டெடுப்பதை உறுதி செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இற்கு வழங்கப்பட்ட உரிமமானது இலங்கை மத்திய வங்கியின் (CBSL) நாணயச் சபையினால் 2020 மே 22 முதல் இரத்து செய்யப்பட்டது. இந்தக் கடனைப் பொறுத்தமட்டில், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலை அறிக்கைகளில் ரூபா 1,229 மில்லியன் மொத்த மதிப்பிழப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2023 மார்ச் 21 அன்று கலைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள நீதிமன்றத்தால் ஒரு கலைப்பாளர் நியமிக்கப்பட்டார். கலைத்தல் தொடங்கும் தேதியில் (16 பெப்ரவரி 2021) நிலுவையில் உள்ள எம்ஜ இன் பிணைக் கடனுக்கான கோரிக்கையை 2023 ஆகஸ்ட் 14 அன்று உத்தரவாதத் திட்டம் சமர்ப்பித்துள்ளது. மீளாய்வாண்டின்டு இறுதியில் உள்ளவாறு தீர்த்து வைப்பதற்கான கலைத்தல் செயல்முறை இடம்பெற்று வருகின்றது.	போதிலும், எந்தவொரு MI க்கும் பாதுகாக்கப்பட்ட முற்பணங்கள் அல்லது கடன்கள் இனிமேல் BSPA இன் கீழ் வழங்கப்படமாட்டாது. 2025 ஆம் ஆண்டில் இதுவரை, பிணைப்படுத்தப்பட்ட குத்தகை மற்றும் வாடகை கொள்முதல் தொகுதியின் பாதுகாப்பிலிருந்து ரூபா 30.07 மில்லியன் கலைப்பாளரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. அத்துடன், மேற்கூறிய MI க்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 391,881.01 அபராதத்திற்கான கோரிக்கையின் முழுமையான மற்றும் இறுதி தீர்வாக ரூபா 391,881.01 தொகை கலைப்பாளரிடமிருந்து 16.09.2025 அன்று பெறப்பட்டது. மேலும், ஒரு பாதுகாக்கப்பட்ட கடன்கொடுத்தோர் என்ற வகையில், நியமிக்கப்பட்ட கலைப்பாளர் மூலம் பெறத்தக்க கடனில் கோரப்பட்ட தொகையின் மீதியை, 2019 ஆம் ஆண்டில் கூடுதல் பிணையமாக SLDIS-க்கு அடமானம் வைக்கப்பட்ட மேற்கூறிய MI-யின் தலைமை அலுவலக சொத்தின் பாதுகாப்பிலிருந்து SLDIS இற்கு மீட்டெடுக்க முடியும்.	

3.2 இனங்காணப்பட்ட இழப்புகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
குறித்துரைத்த முதன்மை வணிகர் ஒருவரின் 2016 மார்ச் 31 ஆந் திகதியன்று முதிர்ச்சியடைகின்ற ரூபா 147.05 மில்லியன் தொகைக்காக 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி திட்டத்தினால் பின்னூட்டல் மீள்கொள்வனவு உடன்படிக்கையில் ரூபா 137.18 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. குறித்த	உரிமைகோரல்களை இறுதி செய்வதற்காக இங்கு கூறப்பட்ட முதன்மை வியாபாரியின் கலைப்பாளர் அனுப்பிய 02.06.2025 தேதியிட்ட	இலங்கை வைப்பக காப்புறுத் திட்டம், கலைப்பாளருடன் அதன் உரிமை கோரலைத் தீவிரமாகத் தொடர

முதன்மை வணிகர் மேற்படி முதலீட்டின் கீழான பிணைப்பணத்தினை எந்தவொரு பிணையினையும் சமர்ப்பிக்காது மீளெடுத்திருந்தார். அதன்படி, 2015 டிசம்பர் 31 அன்று திட்டத்தின் நிதிநிலை அறிக்கையில் மேற்குறித்த முதலீட்டிற்காக ரூபா 144.25 மில்லியன் மதிப்பிழப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2017 யூலை 24 முதல் அரசுப் பத்திரங்களின் முதன்மை ஏலங்களில் பங்கேற்பதைத் தவிர்க்குமாறு இந்த முதன்மை வணிகர் அறிவுறுத்தப்பட்டிருந்தார். 2023 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் நிதிநிலை அறிக்கைகள் மற்றும் செயற்பாடுகளின் படி, இந்த கம்பனியின் பிணையற்ற முதலீட்டாளர்களில் ஒருவரால் கலைக்கப்பட்ட கடன்கொடுத்தோர் ஒருவருக்கு எதிராக வழங்குத் தாக்கல் செய்யப்பட்டு 2022 யூன் 17 அன்று நீதிமன்றத்தால் கலைப்பு உத்தரவு வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், ஏனைய சட்ட நடவடிக்கைகள் காரணமாக கலைக்கப்பட்ட வழக்கு (CHC 83/2021/CO) இன்னும் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளது.	கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படி, கலைப்பாளர் நிறுவனத்திற்கு எதிராக பெறப்பட்ட உரிமைகோரல்களை இறுதி செய்யும் பணி இடம்பெற்று வருகின்றது. மேலும் அவர் கலைத்தல் நீதிமன்றத்தில் ஒரு அறிக்கையை தாக்கல் செய்வார். கலைப்பாளரின் கோரிக்கைக்கு இணங்க, SLDIS ஆனது 12.06.2025 அன்று திருத்தப்பட்ட உரிமை கோரலைச் சமர்ப்பித்தது, இது கலைத்தல் மனுவை தாக்கல் செய்யும் தேதியான 01.11.2021 வரை திரட்டப்பட்ட பொருந்தக்கூடிய சட்ட வட்டியை உள்ளடக்கியது.	வேண்டுமென்பதுடன் அதன் நலன்களைப் பாதுகாக்கவும், பலவீனமான முதலீட்டை அதிகபட்சமாக மீட்டெடுக்கவும் கலைத்தல் நடவடிக்கைகளை நெருக்கமாகப் பின் தொடர்தல் வேண்டும்.

3.3 நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை வைப்பக் காப்புறுதித் திட்ட விதிமுறைகளின்படி, 2012 ஜனவரி 01 அன்று அல்லது அதற்குப் பின்னர் (2023 நவம்பர் 14 வரை) நாணய சபையால் உரிமம் இடைநிறுத்தப் பட்டால் அல்லது இரத்து செய்யப்பட்டால் இழப்பீடு செலுத்தப்படும். அதன்படி, 2018, 2019, 2020 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ஏழு உறுப்பு நிறுவனங்களின் உரிமங்கள் இரத்து செய்யப்பட்டன அல்லது இடைநிறுத்தப்பட்டன. 2021 மார்ச் 19 அன்று இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட செய்திக்குறிப்பில் அறிவிக்கப்பட்டபடி, உரிமம் இரத்து செய்யப்பட்டால் அல்லது இடைநிறுத்தப்பட்டால் மத்திய வங்கியால் ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி நிறுவனங்களின் வைப்பாளர்களுக்கு மேலதிக நிவாரணம் வழங்குவதற்காக, திட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய அதிகபட்ச இழப்பீட்டை நாணய சபை ரூபா 600,000 இலிருந்து ரூபா 1,100,000 ஆக உயர்த்தியது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், பாதிக்கப்பட்ட ஏழு நிதி நிறுவனங்களின் வைப்பாளர் களுக்கு செலுத்த வேண்டிய மொத்த இழப்பீடு ரூபா 35,276.28 மில்லியனாக இருந்ததுடன்	BSPA இன் பிரிவு 44(4) இன் படி, காப்பீட்டு வைப்புத் தொகையின் வைப்புத் தொகையாளரால், MI இன் உரிமம் இரத்து செய்யப்பட்ட நாளிலிருந்து ஆறு ஆண்டுகளுக்குள் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டால், துணைப் பிரிவு (1) இன் கீழ் இழப்பீடு பெற உரிமை உண்டு. இருப்பினும், 06.08.2021 க்கு முன் உரிமங்கள் இரத்து செய்யப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட MI களின் வைப்புத்தொகையாளர்கள், அத்தகைய இரத்து அல்லது இடைநிறுத்தப்பட்ட தேதியிலிருந்து நான்கு ஆண்டுகளுக்குள் தங்கள் கோரிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும். அதன்படி, 2018–2020 ஆம் ஆண்டில் உரிமங்கள் இரத்து செய்யப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட ஆறு நிதி நிறுவனங்களின் வைப்புத் தொகையாளர்களுக்கான	BSPA காலக்கெடு விற்கு ஏற்ப தகுதியான வைப்புத் தொகையாளர் களுக்கு முழு தீர்வு காண வசதியாக, குறிப்பாக 2023 உரிமம் ரத்து செய்யப்பட்டதற்கான நிலுவையில் உள்ள இழப்பீட்டு கோரிக்கைகளை சரியான நேரத்தில் பின்தொடர்தல் மற்றும் கண்காணிப்பதை இந்தத் திட்டம் உறுதி செய்ய வேண்டும்.

அதில் ரூபா 31,364.33 மில்லியன், அதாவது 88.9 சதவீதத்தை, 2025 செப்டம்பர் 30 அன்று திட்டத்தின் நிதியிலிருந்து செலுத்தப்பட்டுள்ளது, 2023 டிசம்பர் 31 நிலவரப்படி ஒட்டுமொத்த கட்டண செலுத்துகை முன்னேற்றம் 88 சதவீதமாக உள்ளது. உரிமம் இரத்து செய்யப்பட்ட ஆண்டு வாரியான தீர்வு முன்னேற்றம் 2018 இல் 80.2 சதவீதமாக இருந்தது (ரூபா 4,133.21 மில்லியனில் ரூபா 3,318.46 மில்லியன்), 2019 இல் 90.2 சதவீதமாக இருந்தது (ரூபா 1,190.74 மில்லியனில் ரூபா 1,074.31 மில்லியன்), 2020 இல் 90.2 சதவீதமாக இருந்தது (ரூபா 29,893.72 மில்லியனில் ரூபா 26,970.51 மில்லியன்), மற்றும் 2023 இல் 1.7 சதவீதமாக இருந்தது (ரூபா 58.61 மில்லியனில் ரூபா 1.05 மில்லியன்).

இழப்பீட்டுத் தொகைகள் 31.12.2024 அன்று நிறுத்தப்பட்டன.

2023 இல் உரிமம் இரத்து செய்யப்பட்ட நிதி நிறுவனத் திற்கான இழப்பீட்டுத் தொகைகள் 2029 வரை தொடரும், 30.09.2025 அன்று அதன் வைப்புத்தொகையாளர் களுக்கு மொத்தம் ரூபா 1.42 மில்லியன் செலுத்தப்பட்டது.

3.4 நிதி முறைமையின் ஸ்திரத்தன்மையை பாதுகாத்தல்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க வங்கியியல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட ‘உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களால் வைப்பாளர்களின் தனித்துவமான அடையாள இலக்கங்களை கட்டாயமாகப் பதிவு செய்தல்’ குறித்த 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க செயல்பாட்டு வழிமுறைகளின் அடிப்படையில், வைப்பகக் காப்பீடு மற்றும் தீர்வுத் திணைக்களமானது வைப்பாளர் பாதுகாப்பை வலுப்படுத்தவும் நிதித் துறை பாதுகாப்பு-நிகர நடவடிக்கைகள் குறித்த பொது விழிப்புணர்வை அதிகரிக்கவும் செயற்படுதல் வேண்டும். இருப்பினும், 2024 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட முயற்சிகளான, (i) நிதித் துறை பாதுகாப்பு-நிகர நடவடிக்கைகள் குறித்த பொது விழிப்புணர்வை அளவிடுதல் மற்றும் மேம்படுத்துதல், (ii) SupTech தீர்வுகளை அறிமுகப்படுத்துவத ற்கான ஆரம்ப படியாக ஒரு தனித்துவமான அடையாள இலக்கத்தின் (UIN) கீழ்	SLDIS இன் கீழ் இழப்பீட்டுத் தொகையைச் செயல்படுத்துவத ற்கும் வட்டப் பங்களிப்புகளைக் கண்காணிப்பதற்கும் DIRD தற்போது எக்செல் அடிப்படையிலான தீர்வுகளைக் கொண்டுள்ளது. DWDCS-ஐ செயல்படுத்துவதற்காக, 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 10 உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களுடன் (LFCs) பரீட்சார்த்தங்கள் நடத்தப் பட்டன, அதைத் தொடர்ந்து 2024 ஏப்ரல் இல் திருத்தப்பட்ட சரிபார்ப்பு வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டதுடன் 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் இறுதிக்குள் 32 LFC-களுக்கும் முழுமையாக அறிமுகப்படுத்தப்பட்டன. பின்னர் இந்த அமைப்பு சிறிய உரிமம் பெற்ற வங்கிகளுக்கு நீட்டிக்கப்பட்டது, அங்கு சில நிறுவனங்கள் தொழில்நுட்ப சிக்கல்களை எதிர்கொண்டன; இந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அந்தந்த வங்கிகள் மற்றும் ITD உடன் ஒருங்கிணைந்து DIRD செயல்படுகிறது. இதற்கிடை	FSSNP இன் கீழ் செயல்திறன் அடிப்படையிலான அளவு கோல்களை சரியான நேரத் தில் அடைவதை உறுதி செய்வதற்கும், வைப்புத் தொகையாளர் பாதுகாப்பு மற்றும் மேற்பார்வை செயல்திறனை வலுப்படுத்துவத ற்கும் வைப்புத்தொகையாளர் வாரியான தரவு சேகரிப்பு முறைமையானது, நாடு தழுவிய பொது விழிப்புணர்வு கணக்கெடுப்பு மற்றும் நீண்ட கால பொது விழிப்புணர்வு உத்தி ஆகியவற்றை செயல் படுத்துவதை வைப்புத்தொகை காப்பீட்டு மற்றும் தீர்வைத் திணைக்களம் விரைவுபடுத்த வேண்டும்.

வைப்பாளர் ரீதியான தரவு சேகரிப்பு முறையை (DWDCS) செயல்படுத்துதல் ஆகியவை மதிப்பாய்வு காலத்தின் இறுதியில் முடிக்கப்பட்டிருக்கவில்லை, இதன் மூலம் நிதித் துறை பாதுகாப்பு நிகர திட்டத்தின் (FSSNP) கீழ் செயல்திறன் அடிப்படையிலான அளவுகோல்களை (PBCs) அடைவதற்கான திணைக்களத்தின் திறனைக் கட்டுப்படுத்துகிறது, வைப்பாளர் பாதுகாப்பு வழிமுறைகளின் செயல்திறனைக் குறைக்கிறது மற்றும் மேற்பார்வை செயல்திறனைக் கட்டுப்படுத்துகிறது. மேலும், நிதித்துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்தும் திட்டத்தின் நிதி ஒப்பந்தத்தில் குறிப்பிடப் பட்டுள்ளபடி, இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் குறித்த பொது விழிப்புணர்வை அளவிடுவதற்காக, சங்கத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு வழிமுறையின் அடிப்படையில், ஒரு வருடத்திற்குள் (2024 டிசம்பர் 31 அன்று அல்லது அதற்கு முன்னர்) இலங்கை மத்திய வங்கி நாடு தழுவிய முதல் பிரதிநிதி கணக்கெடுப்பை நடத்த வேண்டியிருந்ததுடன் பெண்கள் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் கிராமப்புறங்களில் உள்ளவர்கள் உட்பட பொது மக்களிடையே இந்தத் திட்டம் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க நீண்டகால பொது விழிப்புணர்வு உத்தியை இரண்டு ஆண்டுகளுக் குள் (2025 டிசம்பர் 31 க்குள்) ஆளுகைச் சபை அங்கீகரிக்க வேண்டியிருந்தது. இருப்பினும், 2025 ஆகஸ்ட் 31 நிலவரப்படி, நாடு தழுவிய பிரதிநிதி கணக்கெடுப்பை நடத்தி நீண்டகால பொது விழிப்புணர்வு உத்தியை அங்கீகரிப்பதன் செயல் முன்னேற்றம் முறையே 45 சதவீதம் மற்றும் 20 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது. மேலும் பொது விழிப்புணர்வை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதற்காக உறுப்பினர் நிறுவனங்களுக்கு எந்த வழிகாட்டுதல்களும் வழங்கப்பட் டிருக்கவில்லை.

யில், FSSNP-யின் கீழ், DWDCS உட்பட தற்போதுள்ள IT உள்கட்டமைப்பின் இடைவெளி பகுப்பாய்வை மேற்கொள்ளவும், மாற்றங் களையோ அல்லது ஒரு புதிய விரிவான MIS-I நிறுவுவ தையோ பரிந்துரைப்பதற்காக DIRD ஒரு IT ஆலோசகரை உள்வாங்கத் தொடங்கியு ள்ளது.

FSSNP 2024 ஏப்ரல் 03 அன்று செயல்பாட்டுக்கு வந்தது. அதன் செயல்பாடுகளின் ஒரு பகுதியாக, நாடு தழுவிய பொது விழிப்புணர்வு கணக்கெடுப்பை நடத்துவதற்கு ஒரு ஆலோசனை நிறுவனத்தை உள்வாங்குவதை DIRD தொடங்கியது. உலக வங்கி மற்றும் தேசிய கொள்முதல் வழிகாட்டுதல் களின்படி சிக்கலான கொள்முதல் செயல்முறையைத் தொடர்ந்து, 2025 மே 16 அன்று ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. கணக் கெடுப்பை முதலில் 2025 அக்டோபர் 03 க்குள் முடிக்க திட்டமிடப்பட்டிருந்தாலும், வழங்கல் மீளாய்வுக் குழு (Deliverable Review Committee) மற்றும் உலக வங்கியின் மீளாய்வுக் குழுவால் மேற்கொள்ளப்பட்ட கடுமையான மதிப்பாய்வுகள் காரணமாக தாமதங்கள் ஏற்பட்டன. இதன் விளைவாக, ஒப்பந்தம் 2025 டிசம்பர் 09, வரை நீட்டிக்கப்பட்டது, மேலும் ஆலோசனை நிறுவனம் தற்போது திருத்தப்பட்ட இலக்குகளுக்கு ஏற்ப கள ஆய்வை நடத்தி வருகிறது.

மேலும், உலக வங்கியின் (WB) ஆண்டு நடுப்பகுதி மீளாய்வைத் தொடர்ந்து 2025 ஜூலை நடுப்பகுதியில் ஒரு பொது விழிப்புணர்வு உத்தி ஆலோசகரை உள்வாங்குவது தொடங்கப்பட்டது. தகுதி

வாய்ந்த EOI கள் எதுவும் பெறப்படாததால், TOR திருத்தப்பட்டதுடன் REOI 2025 செப்டம்பர் 30 அன்று மீண்டும் வெளியிடப்பட்டது.

3.5 காப்பீட்டு வைப்புக்களுக்காக விதிக்கப்பட வேண்டிய வட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2023 நவம்பர் 15 தேதியிட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வங்கி (விசேட ஏற்பாடுகள்) சட்ட வழிகாட்டுதலின் பிரிவு 7 இன் படி, வங்கி மேற்பார்வை பணிப்பாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின்படி, உடனடியாக முந்தைய நிதியாண்டின் இறுதியில் 14 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட மூலதன போதுமான விகிதத்தை பராமரித்த உரிமம் பெற்ற வங்கிகள் ஆண்டுக்கு 0.10 சதவீத வட்டத்தையும் மற்ற அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் ஆண்டுக்கு 0.125 சதவீத வட்டத்தையும் செலுத்த வேண்டும். இருப்பினும், உரிமம் பெற்ற நிதி நிறுவனங்கள், ஒவ்வொரு உரிமம் பெற்ற நிதி நிறுவனத்தின் மூலதன போதுமான விகிதத்தைப் பொருட்படுத்தாமல், மாத இறுதியில் அனைத்து தகுதியுள்ள வைப்புத்தொகையின் மொத்தத் தொகையிலும், திரட்டப்பட்ட எந்தவொரு வட்டியையும் உள்ளடக்கியதாக கணக்கிடப்பட்டு, மாதாந்த அடிப்படையில் ஆண்டுக்கு 0.15 சதவீத வட்டத்தை செலுத்த வேண்டும். கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, தேர்ந்தெடுக்கப் பட்ட உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களின் மூலதன போதுமான விகிதம் 4.85 சதவீதம் முதல் 95.66 சதவீதம் வரை இருப்பது அதவானிக்கப்பட்டது. அதன்படி, அந்த நிறுவனங்களிட மிருந்து வசூலிக்கப்பட வேண்டிய வட்டத்தை பொருத்தமான அடிப்படையில் மறுபரிசீலனை செய்வது அவசியமாகும். நிதித் துறை பாதுகாப்பு நிகர வலுப்படுத்தும் திட்டத்தின் நிதி ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள	உலக வங்கியின் கொள்முதல் நடைமுறைகள் மற்றும் FSSNP இன் கொள்முதல் திட்டத்தின்படி, 2025 ஜூலை 01 முதல் ஒரு வருட காலத்திற்கு அனுபவம் வாய்ந்த சர்வதேச வைப்பு காப்பீட்டு ஆலோசக ரின் (DIA) சேவைகளை DIRD ஈடுபடுத்தியுள்ளது. குறிப்பாக SLDIS இன் நிறுவன திறனை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவதன் மூலம் நிதித் துறை பாதுகாப்பு நிகரத்தை வலுப்படுத்தும் திட்டத்தின் இலக்குகளை அடைவதை ஆதரிப்பதே இந்த ஈடுபாட்டின் நோக்கம். செயலாற்றல் அடிப்படையிலான நிபந்தனை 04 இன் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ளபடி, வங்கி மேற்பார்வைத் திணைக்களம் (BSD) மற்றும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் (DSNBFI) போன்ற தொடர்புடைய ஒழுங்குமுறைத் திணைக்களங்களுடன் இணைந்து ஆபத்து அடிப்படையிலான வட்ட (RBP) முறை உருவாக்கப்பட்டு வருகிறது. அதன்படி, மேற்பார்வைத் திணைக்களங்கள் மற்றும் ஏற்கனவே உள்ள DIRD தரவுகளின் உள்ளீடுகளைப் பெற்று, DIA இன் வழிகாட் டுதல் மற்றும் தொழில்நுட்ப ஆதரவுடன் விவாதங்கள் நடந்து வருகின்றன. 2026 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் MI களுக்கான RBP	சமமான வட்டக் கட்டணங்கள் மற்றும் வைப்புத்தொகை காப்பீட்டு ஒதுக்குகளின் பயனுள்ள கட்டமைப்பை உறுதி செய்வதற்காக ஆபத்து அடிப்படையிலான வட்ட முறையின் ஒப்புதலையும் செயல்படுத்தலையும் இலங்கை மத்திய வங்கி விரைவுபடுத்த வேண்டும்.

செயலாற்றல் அடிப்படையிலான நிபந்தனைகளின்படி, இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபையானது உறுப்புரிமை நிறுவனங்கள் செலுத்த வேண்டிய வட்ட விகிதத்தில் சரிசெய்தல்க ளுக்கான ஒரு வழிமுறையை அங்கீகரிக்க வேண்டும், இது வைப்பு காப்பீட்டு மீதிகளின் உருவாக்கம் மற்றும் பராமரிப்பை உறுதி செய்வதுடன் அத்தகைய முறையின்படி வட்ட விகிதங்களை சரிசெய்ய தேவையான வழிமுறை களை வெளியிட வேண்டும்.

திட்டத்தின் இரு ஆண்டு கண்காணிப்பு அறிக்கையின்படி, மேற்குறிப்பிட்ட செயலாற்றல் அடிப்படையிலான நிபந்தனையின் முன்னேற்றம் 2025 ஆகஸ்ட் 31 நிலவரப்படி 25 சதவீதம் மட்டுமே ஆகும்.

மாதிரியை அறிமுகப்படுத் துவதே இதன் நோக்கமாகும்.